## தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2017

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான, செலவினக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரப்படக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவு மற்றும் 61 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளைத் தொகுப்பின் 12 ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படுகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை நிதிசார் கூற்றுக்களில் தோற்றுவிக்கின்றன. என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள் (இ.பொ.க.நி)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக் கூற்றுக்களில் உள்ள போதுமானளவு விடயங்கள் பிறிதாகக் காணப்பட வேண்டுமாயினும், மொத்தப் பொறுப்புகளில் 72 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திரைப்பட உற்பத்திகளுக்காகத் திரைப்படக் கூட்டுத்தாபனதிற்கு வழங்க வேண்டிய ரூபா 1,457,772 ஐந்தொகையில் பிறிதாகக் காட்டப்படவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் 09 ஆம பிரிவின் பிரகாரம், ரூபா 10,633,747 பெறுமதியான 3 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை என்பதன் கீழ் காட்டப்பட வேண்டுமாயினும், அவை தொழிற்பட்டு மூலதன விடயங்களது வேறுபாடுகளின் கீழ் முதலீட்டு அதிகரிப்பாகக் காட்டப்பட்டிருந்தன.

**(இ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 1,972,950 கிரயமுடைய மோட்டார் வாகனங்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தபோதும் தொடந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், இம் மோட்டார் வாகனங்களது காப்புறுதி உறுதிகளில் குறிப்பிடப்பட்ட தற்போதைய சந்தைப் பெறுமதி ரூபா 1,600,000 ஆக இனங்காணப்பட்டுமிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

நிறுவனம் கடைப்பிடிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் தெரியப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்பு முதலீடுகளது பெறுமதி ரூபா 2,000,000 ஆகும். இவற்றினது 2017 ஆம் ஆண்டிற்கான வட்டி ரூபா 44,848 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2001,2002 ஆம் ஆண்டுகளில் மருதானையில் உள்ள சினேசிட்டி சினிமாக் கட்டிடத் தொகுதி நிர்மாண நடவடிக்கைகளுக்கும் உபகரணங்களுக்கும் நிதியம் வழங்கிய கடன் ரூபா 8,500,000 ஆகும். இதன் பொருட்டு அறவிட வேண்டிய வட்டி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை. 2006 ஆம் ஆண்டு வரை மாத்திரமே கடனுக்கான வட்டியாக ரூபா 4,064,958 அறவிடப்படவுள்ளமை கணிப்பிடப்பட்டிருந்தும், அதனையடுத்துப் பெற வேண்டிய வட்டியும் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இனங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் பணத்தை முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரினதும் குறித்த அமைச்சரதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரமின்றி திறைசேரி உண்டியல்களிலும் நிலையான சொத்துக்களிலும் ரூபா 64,683,332 முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1999 யூன் 17 ஆந் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சின் தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டலின் 6.5 ஆம் பிரிவு | முதலீட்டுச் சபைப் பிரமாணங்களின் கீழ் நிர்மாணிக்கப்படும் சினிமாக் கட்டிடத் தொகுதிகளில் காண்பிக்கப்படும் ஒவ்வொரு இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படத்தினதும் நுழைவுச் சீட்டின் ரூபா 2.25 அல்லது மொத்த நுழைவுச் சீட்டினது வருமானத்தில் 2.25 சதவீதம் ஆகியவற்றில் எது கூடியதோ அது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்குக் கிடைக்க வேண்டுமாயினும், 2001 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட மருதானையில் அமைந்துள்ள சினேசிட்டி (CINE CITY) சினிமாக் கட்டிடத்தொகுதியிலிருந்து அவ்வாறாகப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1996 ஒக்டோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவித கட்டணம்) கட்டளை இலக்கம் 4 பிரிவு | சகல சினிமாக் கொட்டகைகளும் இறக்குமதி செய்யப்படும் படத்தை காண்பிக்கும்போது அறவிடும் கட்டணத்திற்குப் புறம்பாக (LEVY) ‘‘யூ’’ தரத்திலான திரைப்படம் ஒன்றிற்கான நுழைவுச் சீட்டில் ஒரு ரூபாவும் ‘‘எக்ஸ்’’ தரத்திலான மற்றும் ‘‘வயது வந்தவர்களுக்கு மிகவும் தகுதிவாய்ந்தது’’ எனும் தரத்திலான திரைப்படங்களின் பொருட்டு வழங்கப்படும் நுழைவுச் சீட்டில் 3 ரூபாவும் அறவிட வேண்டும். அவ்வாறாக |

| | | |
|---|---|---|
| | | அறவிடப்படும் மொத்தத் தொகையும் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்படுவதற்காக சினிமாக் கொட்டகை உரிமையாளர் அல்லது குத்தகையாளர் கூட்டுத்தாபனத்திற்கு அதனை அனுப்பி வைக்க வேண்டுமாயினும் அதற்குப் பொறுப்பானவர்கள் அதனை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 1996 ஒக்டோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பிரசுரத்தால் திருத்தஞ் செய்யப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியக் கட்டளை இலக்கம் 6(இ) பிரிவு | கடனைத் திருப்பி செலுத்தாது தாமதமாகின் அதற்கான தண்டப் பணம் பணிப்பாளர் சபையால் நிச்சயிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டு வரை சினிமாக் கொட்டகை உரித்தாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடனாகிய ரூபா 73,291,424 தொடர்பாக அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 8,798,358 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,433,093 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 1,365,265 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது ஏனைய வருமானம் ரூபா 1,470,483 அதிகரித்தமையே இவ்வதிகரிப்புக்கான காரணமாகும்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 5 முதல் 24 ஆண்டுகளுக்கு இடையேயான கடன்பட்டோர் மீதி ரூபா 67,001,194 ஆகவிருந்தது. அது அறவிடப்பட முடியாத கடனாக இனங்காணப்பட்டிருந்தது. இக்கடனை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் பிரதான வருமான வழியாகிய திரைப்பட வாடகைப் பங்களிப்பை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட

வேண்டுமாயினும், அநேக ஆண்டுகளாக இதனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் பெற வேண்டியிருந்த தொகை ரூபா 22,347,924 ஆகும்.

(இ) 2001, 2002 ஆம் ஆண்டுகளில் மருதானை சினேசிட்டி கட்டிடத் தொகுதி நிர்மாண வேலை நடவடிக்கைகள் மற்றும் உபகரணக் கொள்வனவுகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 8,500,000 கடனானது உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அல்லாது வேறு வழிகளில் அறவிடப்பட்டமையால் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேலும் ரூபா 2,212,910 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) மேற்படி (இ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கடன் உடன்படிக்கைப் பிரகாரம், சினேசிட்டி சினிமாக் கட்டிடத்தொகுதியில் திரைப்படக் காட்சிகளின்போது தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் வழங்கிய கடனை அறவிடும் வரை ஏறக்குறைய 15 ஆண்டுகளாக கூட்டுத்தாபனம் வழங்கியவாறிருந்த திரைப்படக் காட்சிகளுக்கு முன்னுரிமையளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தபோதும், நிதியத்தின் முகாமைத்துவம் அது தொடர்பாகப் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், திறைசேரி உண்டியல்களிலும் மீள் கொள்வனவுத் திறைசேரி உண்டியல் வைப்புகளிலும் (Repo) உள்ள முதலீடுகள் முறையே ரூபா 52,080,342 மற்றும் ரூபா 10,602,990 என்பனவாகும். இம் முதலீடுகள் தேசிய சேமிப்பு வங்கியல் தொடர்ச்சியாக முதலீடு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இது தொடர்பாக திறைசேரி உண்டியல்களது விற்பனை நடவடிக்கைகளுக்கான ஆரம்ப வர்த்தகர்களாகிய ஏனைய அரச வங்கிகளது கூறு விலைகள் கோரப்பட்டு மிகவும் சாதகமான வட்டி வீதத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 133,134 ஆம் நிதிப்பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | திரைப்பட வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு முறையான விதி முறைகள் தயாரிக்கப்படாமை |
| (ஆ) கடன் நிர்வாகம் | கடன் வழங்குதல் மற்றும் அறவிடுதல் ஆகியவற்றிற்கான விதிக் கோவை நாளதுவரயாக்கப்பட்டிராததுடன் கடன் நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |
| (இ) முதலீடுகள் | முதலீடுகள் தொடர்பான சட்டங்கள், விதிகள் மற்றும் மிகவும் சாதகமான முதலீட்டு வழிவகைகள் போன்றவற்றில் கவனம் செலுத்தாமை. |